**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*“சட்டமன்றப் பேரவை விதி 13(2)-ன்கீழ் இன்று நடைபெறவிருக்கும் ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தைத் தள்ளிவைத்து, இன்று முன்மொழியப்பெறும் அரசினர் தனித் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்”*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவை முடிவுக்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)*

*மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

## 6. அரசினர் தனித் தீர்மானம்

### இலங்கையில் இனப் படுகொலை நிகழ்த்தியவர்களைப் போர்க் குற்றவாளிகள் எனப் பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை வற்புறுத்தவும், தமிழர்களுக்கு மறுவாழ்வு அளித்து அனைத்துக் குடியுரிமைகள் வழங்கவும், அதுவரை இலங்கை அரசுமீது பொருளாதாரத் தடை விதிக்க நடவடிக்கை எடுக்கவும் மத்திய அரசை வலியுறுத்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்னாட்டு போர் நெறிமுறைகளை மீறி இலங்கையில் இனப்படுகொலையை நிகழ்த்தி போர்க் குற்றம் புரிந்தவர்களைப் போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வற்புறுத்த வேண்டுமென்றும், இலங்கையில் உள்ள அகதிகள் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு முழு மறுவாழ்வு அளித்து,*

2011 ஜூன் 8] [செல்வி ஜெ ஜெயலலிதா]
அவர்கள் வசித்த இடங்களிலேயே அவர்களை மீண்டும் குடியமர்த்தி, சிங்களர்களுக்குரிய அனைத்துக் குடியுரிமைகளையும் தமிழர்களுக்கு இலங்கை அரசு வழங்கும் வரையில் மற்ற நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசுமீது பொருளாதாரத் தடையை விதிக்க வேண்டுமென்றும், மத்திய அரசை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு சார்பில் பின்வரும் தீர்மானத்தினை நான் முன்மொழிய விழைகிறேன்.

*முற்பகல் 10-25*

**தீர்மானம்**

"தமிழனின் பண்பு யாருக்கும் தாழ்ந்தவனாக இருப்பதல்ல; யாரையும் தாழ்த்துவதல்ல" என்றார் பேரறிஞர் அண்ணா. இப்படிப்பட்ட உயரிய எண்ணத்தைக் கொண்ட தமிழர்கள் உலகெங்கும் பரவியிருக்கிறார்கள். மொழி மற்றும் கலாச்சார பாரம்பரியத்தில் ஒற்றுமையுடன் திகழும் இலங்கைத் தமிழர்களுக்கும், தமிழ்நாட்டில் வாழும் தமிழர்களுக்கும் இடையே உள்ள தொப்புள்கொடி உறவு அனைவரும் அறிந்த ஒன்றாகும். இலங்கைக்கு விடுதலை கிடைத்துவிட்டாலும், அங்கு வாழும் தமிழர்கள் அவர்கள் நாட்டிலேயே இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்படுவதை எதிர்த்து, இலங்கைத் தமிழர்கள் பல்லாண்டுக் காலமாகப் போராடி வந்தனர். இவர்களின் கோரிக்கைகளில் உள்ள நியாயத்தை உணர்ந்து, தேவையான அரசமைப்புச் சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்து, தமிழர்கள் கவுரவத்துடனும், சம உரிமையுடனும், சுயமரியாதையுடனும் வாழ்வதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்காமல், அவர்களை முற்றிலும் ஒழித்துக்கட்ட இலங்கை அரசு நடவடிக்கை எடுத்தது.

1. பரவலாக குண்டுமழை பொழிந்து அப்பாவி மக்களைக் கொன்று குவித்தது;

2. மனிதர்கள் வாழும் இடங்களின்மீதும், மருத்துவமனைகள்மீதும் குண்டுகளை வீசியது;

3. மனிதாபிமான முறையில் செய்ய வேண்டிய உதவிகளைச் செய்ய மறுத்தது;

4. உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகப்படக்கூடியவர்கள்

உட்பட இந்தச் சண்டையில் பலியானவர்கள் மற்றும் எஞ்சியுள்ளவர்கள்மீது மனித உரிமை மீறல்களை நிகழ்த்தியது;

*5.* இலங்கை அரசை விமர்சிப்பவர்கள் மற்றும் ஊடகங்கள் உட்பட போர்ப் பகுதிக்கு வெளியே இருப்பவர்கள்மீது மனித உரிமை மீறல்களை நிகழ்த்தியது போன்ற கடுமையான, நம்பத்தகுந்த குற்றச்சாட்டுக்களை உள்நாட்டுப் போரின்போது இலங்கை அரசு நிகழ்த்தியுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரால் நியமனம் செய்யப்பட்ட குழு கண்டறிந்து இருக்கிறது.

எனவே, இத்தகைய போர்க் குற்றங்கள் நிகழ்த்தியவர்களைப் போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் எனவும், தற்போது இலங்கை முகாம்களில் உள்ள தமிழர்கள் அனைவரும் தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்பி, சிங்களர்களுக்கு இணையாக கண்ணியமாக வாழ வகை செய்யும் வரையில், அனைத்துக் குடியுரிமைகளையும் தமிழர்கள் பெறும் வரையில், மற்ற நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசின்மீது பொருளாதாரத் தடையை விதிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை இந்திய அரசைக் கேட்டுக்கொள்கிறது." *(மேசையைத் தட்டும் ஒலி)*

இந்தத் தீர்மானத்தின்மீது அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் பேசிய பிறகு, இதுபற்றிய எனது கருத்துகளை மேலும் எடுத்துரைக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்மானத்தின்மீது விவாதம். கருத்து தெரிவிக்க விரும்பும் உறுப்பினர்கள் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கின்றேன். முதலில், மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள். *(குறுக்கீடு)* முனைவர் செ.கு. தமிழரசன், நீங்கள் பேச விரும்புகிறீர்களா? அதனால்தான் நான் முதலிலேயே கையைத் தூக்கச் சொன்னேன். சரி, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை மண்ணில் ஒவ்வொரு நாளும் வெந்து வீழ்ந்து கொண்டிருக்கிற தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க

2011 ஜூன் 8] [முனைவர் செ.கு. தமிழரசன்]

8 கோடி தமிழர்களின் ஒட்டுமொத்த உரிமைக் குரலாக விளங்குகிற, உலகத் தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகிற, மாண்புமிகு தமிழக முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு கொண்டு வந்திருக்கிற இந்த அரசினர் தனித் தீர்மானத்தை எங்கள் இயக்கத்தின் சார்பிலே வரவேற்பதிலே நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ் மொழியையும், தமிழ் இனத்தையும் தனது சொந்த விளம்பரத்திற்குப் பயன்படுத்துகிற அப்படிப்பட்ட இயல்புக்கு மாறாக எந்த வகையிலும் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும், தமிழர்களின் வாழ்வை மேம்படுத்துவதிலும், தமிழர்களின் குரலை உலக அரங்கிலே ஒலிக்கச் செய்வதிலும் நான் சமரசம் செய்து கொள்ளவே மாட்டேன், ஏற்றுக்கொண்ட கொள்கையிலே மிக உறுதியாக இருக்கிற அப்படிப்பட்ட பண்பு எனக்கு உண்டு என்று இன்று உலகத்திற்குச் சொல்கிற (மேசையைத் தட்டும் ஒலி) வகையிலே இந்தப் பேரவையின் முதல் கூட்டத் தொடரிலேயே தமிழர்களுடைய உரிமைகளை எதிரொலிக்கிற, உலகத்தின் கவனத்திற்குக் கொண்டு வரச் செய்கிற இந்தத் தீர்மானத்தை மிகத் துணிவோடு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள் என்கிறபோது தமிழ் இனமே இந்தத் தீர்மானத்தை வரவேற்க, வாழ்த்த, பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கூப்பிடும் தொலைவிலே இருக்கிற இலங்கை மண்ணிலே நம் தொப்புள்கொடி உறவுகளான தமிழ் மக்கள் படுகொலைக்கு உள்ளாவது, கற்பழிப்புக்கு உள்ளாவது, சுரண்டப்படுவது, சொந்த மண்ணிலேயே இரண்டாம் தர குடிமக்களாக நடத்தப்படுவதை இந்தத் தீர்மானத்திலேயே அந்த வரியை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்கிறபோது, இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே அதை அரசியலாக்கி, அந்த அரசியலைக் கொண்டே இயக்கம் நடத்துபவர்களுக்கு மத்தியிலே, நான் அந்த மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த இன்றைக்கு இந்தத் துணிவான தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிறேன் என்று சொல்கின்ற வகையிலே, இரண்டாம் தர குடிமக்களாக, அடுத்த நாட்டு மக்களானாலும் அவர்கள் நம்முடைய தொப்புள்கொடி

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2011 ஜூன் 8

உறவுகள் என்று இங்கே வலியுறுத்தி, இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்திருப்பதை நான் முழுக்க முழுக்க பாராட்டி, வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-30

படுகொலை, கற்பழிப்பு, அதைவிட ஒவ்வொரு நாளும் சொந்த மண்ணிலேயே அவர்கள் வாழ்வுரிமை இழந்தவர்களாகக் கருதப்படுகின்ற அவலம், இதற்கும் மேலே அவர்கள் மனிதாபிமானம் இல்லாத வகையிலே அந்த மக்களைச் சீர்குலையச் செய்வது போன்ற செயல்களைக் கண்டித்து, இந்தக் குற்றத்தைச் செய்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் போர்க் குற்றவாளிகளாக உலக அரங்கிலே நிறுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும், இந்தக் குற்றத்திற்குத் துணை நிற்கின்ற அந்த நாட்டிற்குப் பொருளாதாரத் தடை விதிக்க வேண்டுமென்றும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தீர்மானத்தை எங்கள் இயக்கத்தின் சார்பிலே மனப்பூர்வமாக முன்மொழிந்து, வழிமொழிந்து, அதற்கும் மேலே, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதுபோல் ‘உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்’ என்பதற்கு இலக்கணமாக இருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தையும், அதன் வடிவமாக இருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்களையும் வாழ்த்தி (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தீர்மானத்தை நான் வரவேற்று அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய எல்லையிலிருந்து 26 கிலோ மீட்டருக்கு அப்பாலுள்ள இலட்சக்கணக்கான ஈழத் தமிழ் மக்கள் தங்களுடைய சுதந்திரத்திற்காகவும், சுய நிர்ணய உரிமைக்காகவும் ஐம்பதாண்டு காலத்திற்கும் மேலாகப் போராடி வருகிறார்கள். எனினும், அவர்களுடைய போராட்டம் இன்னும் முற்றுப்பெற்றதாகத் தெரியவில்லை. பயங்கரவாதிகளுக்கு எதிரான போர், தீவிரவாதத்தை ஒழித்துக்கட்டுகிறேன் என்ற பெயரில் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 3-ஆம் தேதியும், மே மாதம் 18-ஆம் தேதியும், சிங்களப் பேரினவாத அரசு, ராஜபக்சேவின் அரசு, ஈழத் தமிழ் மக்கள்மீது நடத்திய

2011 ஜூன் 8] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]
மனிதாபிமானமற்ற தாக்குதலில், முள்ளிவாய்க்காலில் முப்பதாயிரம் பேர்கள் ஒரே நேரத்தில் படுகொலைக்கு ஆளானார்கள். சர்வதேச போர் விதிமுறைகளுக்கு மாறாக ஈழத் தமிழ் மக்கள்மீது போர் தொடுத்த ராஜபக்சே சர்வதேச நீதிமன்றத்திலே குற்றவாளியாக நிறுத்தப்படவேண்டும் என்று கடந்த இரண்டு ஆண்டு காலத்திற்கும் மேலாக உலகெங்கும் வாழக்கூடிய தமிழ் மக்கள் குரல் கொடுத்து வருகிறார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு ஈழத் தமிழ் மக்கள் மீதான போர் நிறுத்தப்பட வேண்டும் என்று கோரி உண்ணாவிரதம் இருந்தபொழுது, நாங்களெல்லாம் அதிலே கலந்துகொண்டு வாழ்த்தினோம். கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு, இந்தப் போர் முடிந்த பிறகு, நான் கோவையிலே நடத்திய மாநாட்டிற்காக மலேசியத் தமிழர்களை அழைப்பதற்குச் சென்றேன். நீங்கள் எல்லோரும் தமிழகத்திலிருந்து எதற்காக வருகிறீர்கள்; இலட்சக்கணக்கான தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டபொழுது தமிழகத்திலிருந்து எதிர்ப்புக் குரல் வரவில்லை. இங்கே இருக்கக்கூடிய ஆட்சியாளர்கள் குரல் கொடுக்கவில்லை என்று தமிழர்கள் எல்லோரும் வெட்கி, நாணித் தலைகுனியக்கூடிய வகையிலே உலகத் தமிழர்கள் நம்மையெல்லாம் ஏளனமாகப் பார்த்தார்கள். ஆனால் இன்று ஆறு கண்டங்களிலே வாழ்கின்ற எட்டு கோடி தமிழர்களுடைய தன்மானத்தைத் தூக்கி நிறுத்தக்கூடிய வகையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சார்பாக (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் மக்களுக்கு எதிராகப் போர்க் குற்றம் புரிந்த ராஜபக்சே குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட வேண்டுமென்று கொண்டுவரப்பட்டிருக்கின்ற தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன்.

நேற்றுகூட அன்பு சகோதரர் திரு. குணசேகரன் அவர்கள் பேசியபொழுது, அதிலே அம்மா அவர்கள் ஈழத் தமிழ் மக்கள் குறித்துக் கருத்து சொல்லவில்லையே என்று ஏங்கினேன். ஒரு நாள்கூட எங்களது ஏக்கத்தை விட்டுவைக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு இன்றே விடையளித்திருக்கிறார்கள்.

*முற்பகல் 10-35*

பேரவைத் தலைவர் அவர்களே, ஈழத் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த போர் சாதாரணமானதல்ல. அந்தப் போர் இன்றும்

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2011 ஜூன் 8

முற்றுப்பெற்றதாகத் தெரியவில்லை. ஒரே நாளிலே முப்பதாயிரம் பேர் கொன்று குவிக்கப்பட்டார்கள். மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட ஈழத் தமிழ் மக்கள் முள்வேலி முகாம்களிலே அடைக்கப்பட்டார்கள். அவர்களையெல்லாம் விடுதலை செய்துவிட்டோம் என்று சொன்னார்கள். ஆனால் இன்றும் இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் சிறு சிறு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்திய அரசால் ஈழத் தமிழ் மக்களுக்காக அனுப்பப்படக்கூடிய எந்தவிதமான உதவிகளும் தமிழ் மக்களுக்குச் சென்றடைவதில்லை. 500 டிராக்டர்கள் அனுப்பினார்கள், அவற்றிலே 26 டிராக்டர்கள் மட்டும்தான் தமிழர்களுக்குச் சென்றடைந்திருக்கின்றன. 50,000 வீடுகள் கட்டுவதற்கு வேண்டிய இலட்சக்கணக்கான சிமென்ட் மூட்டைகளை இந்திய அரசு அனுப்பி வைத்தது. அவை தமிழர்களுக்குச் சென்றடையவில்லை. எனவே, இவையெல்லாம் நடைபெறுவதற்குக் காரணம், அங்கிருக்கக்கூடிய சிங்களப் பேரினவாத அரசு, தமிழ் மொழியையும், தமிழினத்தையும் சிங்களர்களுக்கு நிகராக மதிப்பதற்குத் தயாராக இல்லை. தமிழ் மக்கள் தானாக முன்வந்து அவர்கள் ஆயுதப் போராட்டங்களை எடுக்க முன்வரவில்லை. 50 ஆண்டுக் காலத்திற்கும் மேலாக ஜனநாயகரீதியான போராட்டங்களை நடத்தினார்கள். ஏதோ ஒருசில ஜனநாயகவாதிகள், சிங்கள அரசிலே பதவி வகித்தவர்கள், தமிழர்களுக்கு ஏதாவது உறுதி கொடுக்க வந்தால், அவர்களும் பலாத்காரமாக வெளியேற்றப்பட்டார்கள், கொல்லப்பட்டார்கள் அல்லது பதவியிறக்கம் செய்யப்பட்டார்கள். இந்த நிலையில்தான் தமிழினத் தலைவர் தந்தை செல்வா அவர்களுடைய தலைமையில் வட்டுக்கோட்டை மாநாட்டிலே தமிழர்களுக்கு உண்டான தனி நாடு போன்றதொரு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதுதான் பின்பாக தனி ஈழக் கோரிக்கையாக மலர்ந்தது. எனவே, தனி ஈழம் அவர்கள் கேட்கக்கூடிய சூழ்நிலை எப்போது உருவாயிற்று என்று சொன்னால், தமிழ் மொழிக்கு ஓர் அங்கீகாரம் இல்லாதது, தமிழர்கள் சிங்களர்களுக்குச் சமமாக மதிக்கப்படாத சூழ்நிலையினால் உருவாயிற்று. இதைத்தான் சிங்களத்திலேயிருந்து வந்த ஒரு பாதிரியார் அவர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர், முன்வரிசைத் தலைவர்கள் எல்லோரும் பேச வேண்டும். அதனால் கொஞ்சம் co-operate பண்ணுங்கள்.

2011 ஜுன் 8]

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *சிங்களத்திலேயிருந்து வந்த ஒரு பாதிரியார் மிக அழகாகச் சொன்னார்.* If there are two langauages, there will be one nation. If there is only one language, there will be two nations. *அதாவது, இரண்டு மொழிகள், இரண்டு இனங்கள் என்று சொன்னால், ஒரு தேசமாக இருக்கும். ஒரே மொழி, ஒரே இனம் என்று சொன்னால், இரண்டு தேசங்களாக இருக்கும் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில்தான் தமிழர்களுக்குச் சமமான அந்தஸ்து இல்லை, மதிப்பு இல்லை, மரியாதை இல்லை, எனவே தங்களால் அவர்களோடு இணைந்து வாழ முடியாத சூழலில்தான் அவர்கள் தனி ஈழம் கேட்டார்கள். அவர்கள் அதற்காகக் கொடுத்த விலை, இரண்டு இலட்சம் உயிர்கள். எனவே, அப்படிப்பட்ட நியாயத்திற்காகவும், ஜனநாயக உரிமைகளுக்காகவும் போராடிய தமிழ் மக்கள்மீது, சர்வதேசப் போர் விதிமுறைகளுக்கு மாறாக நடந்துகொண்ட ராஜபக்சேவை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தினால் மட்டும்தான் தமிழர்கள் அங்கே சமமாக வாழ முடியும்; அவர்களும் மனிதர்களாக வாழ முடியும். எனவே, அப்படிப்பட்டதொரு தீர்மானம் இந்த அவையிலே நிறைவேற்றப்படுவது மட்டுமல்ல, அவர் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்படுகின்ற வரையிலே இங்கிருந்து குரல், ஆதரவுக் குரல் ஓங்கி ஒலித்துக்கொண்டேயிருக்க வேண்டும்.*

*அதுமட்டுமல்ல, இப்போது அங்கே ஈழத்திலே என்ன நடக்கிறது என்பதை அறிந்து வருவதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களே, உண்மை நிலைமையைத் தெரிந்து வருவதற்காகத் தமிழகத்திலேயிருந்து ஒரு சட்டமன்றக் குழுவை அனுப்பி வையுங்கள். அப்போதுதான், அங்கே இருக்கக்கூடிய நிலைமைகளையெல்லாம் தமிழக மக்களுக்கும் சொல்ல முடியும். இந்திய அரசுக்கும் சொல்ல முடியும். எனவே, இப்போது இந்தத் தீர்மானம் என்பது தமிழகத்தினுடைய வரலாற்றில், உலகத் தமிழர்களுடைய வரலாற்றில், உலகெங்கும் வாழக்கூடிய, அகதிகளாக வாழக்கூடிய 15 இலட்சம் தமிழர்கள், ஈழத்திலே இன்னும், குற்றுயிரும் கொலையுயிருமாக இருக்கக்கூடிய தமிழர்களுக்கு ஓர் ஆதரவுக் கரமாக இருக்கும். இதுதான், ஈழத் தமிழர்களுடைய விடுதலைக்கு உண்டான ஒரு திறவுகோலாக அமையும் என்பதையும் சுட்டிக்காட்டுகிறேன். எனவே, இந்தத் தீர்மானத்தை நான் மனதார வரவேற்று விடைபெறுகிறேன், வணக்கம்.*

[2011 ஜூன் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா.

*முற்பகல் 10-40*

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பக்கத்து நாடான இலங்கையிலே, உலகத் தமிழர்களால் ஈழம் என்று அழைக்கப்படக்கூடிய பகுதியிலே, இந்த நூற்றாண்டில் நடைபெற்ற மிக மோசமான போர்க் குற்றங்களுக்குக் காரணமாகயிருந்த கொடுங்கோலன் ராஜபக்சே, போர்க் குற்றவாளியாக நிறுத்தப்படுவதற்கு இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி, மாண்புமிகு தமிழக முதல்வர் இன்று கொண்டு வந்திருக்கக்கூடிய தீர்மானம், உலகம் முழுவதும் வாழக்கூடிய தமிழர்களுக்கு, அவர்கள் பட்ட காயங்களுக்கு மருந்து தடவக்கூடிய ஒரு தலைசிறந்த தீர்மானமாக இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்கெனவே, பல மனித உரிமை அமைப்புகள், குறிப்பாக, Human Rights Watch ஈழத்திலே தமிழர்களுக்கு எதிராக சிங்களப் பேரினவாத அரசு புரிந்த கொடுங்கோன்மைகளையெல்லாம் விரிவாக அறிக்கைகள் அளவிலே அளித்திருந்தாலும்கூட, தற்போது, ஐ.நா.வினுடைய பொதுச் செயலாளர் பான் கீ மூன் அமைத்த உண்மை அறியும் குழு, இன்று பரிதவித்து நிற்கக்கூடிய இலங்கைத் தமிழர்களுக்கு, ஈழத் தமிழர்களுக்கு ஒரு ஆயுதமாக இராஜபக்சேவை தண்டிப்பதற்கான ஒரு வழியாக அமைந்திருக்கின்றது. ஆனால், இந்தப் போர்க் குற்றங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில், தமிழகத்தில், தமிழர்களுடைய நலனைக் காக்கின்றோம் என்று சொல்லி ஒரு ஆட்சி இருந்தது. இராஜபக்சே என்னென்ன போர்க் குற்றங்களையெல்லாம் செய்தார் என்று எந்த ஐ.நா.-வினுடைய குழு அறிக்கைத் தந்திருக்கின்றதோ அந்த நிகழ்வுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நேரத்திலே இங்கே உண்ணாவிரத நாடகம் மட்டுந்தான் நடைபெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இதைத் தடுத்து நிறுத்துவதற்காக மத்திய அரசு நடவடிக்கை எடுத்துவிட்டது என்று சொல்லி ஒருசில நிமிடங்களிலே அந்த உண்ணாவிரத நாடகமும் முடிந்து விட்டது. ஆனால், எம் தமிழ் சொந்தங்கள் அழித்தொழிக்கப்பட்டனர். ஆனால், ஆட்சிக்கு வந்த புதிதிலேயே, இந்த முதல் கூட்டத் தொடரிலேயே நம்முடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இராஜபக்சேவை போர்க் குற்றவாளியாக நிறுத்த வேண்டுமென்று

2011 ஜூன் 8] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

சொல்லியிருக்கக்கூடிய இந்தத் தீர்மானம், ஒவ்வொரு தமிழருடைய உள்ளக் குமுறல்களைப் பிரதிபலிக்கக்கூடிய தீர்மானமாக அமைந்திருக்கிறது. மனித நேய மக்கள் கட்சி இந்தத் தீர்மானத்தை வரவேற்கின்றது. பொருளாதாரத் தடை மட்டும் போதாது. இதற்குமேலே ஒரு படி சென்று, ஏனென்றால் இராஜபக்சே இன்றளவும் போர்க் குற்றத்தைச் செய்து கொண்டு வருகின்றார். இன்றளவும் நம்முடைய ஈழத் தமிழ்ப் பெண்கள் பாலியல் பலாத்காரத்திற்கு இலக்காகி வருகிறார்கள். இதற்கெல்லாம் காரணம், இலங்கை அரசுக்கு, இந்தியப் பேரரசு உதவியாக இருக்கின்றது, தன்னை எப்படியும் காப்பாற்றும் என்று இராஜபக்சே நினைத்துக் கொண்டிருக்கிறார். தமிழக அரசு கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தோடு சேர்த்து நான் ஒரு கோரிக்கையை வைக்கின்றேன். இலங்கையிலே, ஈழத்திலே நம்முடைய தமிழ் மக்கள் வாழ்வுரிமையைப் பெற வேண்டுமென்றால் அதற்கு இந்தியாவே செய்யக்கூடிய ஒன்று இலங்கையுடனான ராஜ்ய உறவை, diplomatic relations-ஐ உடனே துண்டிக்க வேண்டுமென்றும், அதையும் தீர்மானமாக நிறைவேற்ற வேண்டுமென்றும் சொல்லி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை மனப்பூர்வமாக, உளப்பூர்வமாக வரவேற்று அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, உலக நாடுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து போர்க் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டிருக்கிற இராஜபக்சேவை கூண்டில் ஏற்ற வேண்டுமென்று குரல் கொடுத்திருக்கின்றார்கள். ஐக்கிய நாடுகள் சபை போர்க் குற்றவாளி என்று பிரகடனப்படுத்தியிருக்கின்றது. இந்த நிலையில் மனித நேய மாண்புக்கு மாறாக நடந்து கொண்ட இலங்கை அரசின்மீது பொருளாதாரத் தடையை விதிக்க மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்கின்ற தீர்மானத்தைப் பாட்டாளி மக்கள் கட்சி முழுமனதோடு வரவேற்கிறது. தீர்மானத்தைக் கொண்டு வந்த முதல்வர் அவர்களையும், தமிழக அரசையும் வெகுவாகப் பாராட்டுகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி).

இலங்கைப் பிரச்சினையில், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்கள் தொப்புள்கொடி

உறவினர்களுக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்பதில் முனைப்பாகச் செயல்பட்டு வருகிறார்கள் என்பதை இந்த நாடு நன்கு அறியும். பல்வேறு காலக்கட்டங்களில், உண்ணாவிரதம் ஆர்ப்பாட்டம், போராட்டம் என்றெல்லாம் இலங்கை அரசுக்கு எதிராக நடத்தியதையெல்லாம் நாம் நன்கு உணர்வோம். சரித்திரப் புகழ்வாய்ந்த இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்ற தமிழக அரசையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் பாராட்டுகிறோம். அதேநேரத்தில் தமிழ் ஈழம் ஒன்றுதான் நிரந்தரத் தீர்வாக இருக்கும் என்பதையும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் இந்தப் பேரவையில் பதிவு செய்கிறோம். இந்த நேரத்தில் கர்நாடகாவில் இருக்கக்கூடிய அந்த மக்களெல்லாம் அவர்களுக்கு ஒரு பிரச்சினை என்று சொன்னால், அவர்கள் அனைவரும் கட்சிக்கு அப்பாற்பட்டு, மதத்திற்கு அப்பாற்பட்டு ஒன்று திரண்டு குரல் கொடுக்கின்றார்கள். அதேபோல், இங்கே இருக்கக்கூடிய தமிழர்களுடைய வாழ்வு மலர வேண்டுமென்பதற்காக நாம் அனைவரும் ஒன்றாகத் திரண்டு, ஓரணியில் நின்று நம்முடைய கொள்கையெல்லாம் இலங்கைத் தமிழர்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும், ஈழம் அமைய வேண்டும் என்பதைக் குறிக்கோளாக ஏற்று, ஓரணியில் நின்று நம்முடைய குரலை ஓங்கி ஒலித்து மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டுமென்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

*முற்பகல் 10-45*

***திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய தொப்புள்கொடி உறவான இலங்கைத் தமிழர்களின் நலனைப் பாதுகாப்பதிலே காங்கிரஸ் பேரியக்கம் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. மத்திய அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. போருக்குப் பின்பு பல்வேறு நிதி உதவிகளையெல்லாம் நமது தமிழர்களுடைய நலனுக்காக மருத்துவக் குழுக்கள் போன்றவற்றையெல்லாம் இலங்கைக்கு அனுப்பி அவர்களுடைய நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதிலே மத்திய அரசைப் பொறுத்தவரையிலே மிகுந்த அக்கறை கொண்டுள்ளது என்பதை

2011 ஜூன் 8] [திரு. என்.ஆர். ரெங்கராஜன்]
இந்த நேரத்திலே நான் பதிவு செய்கின்றேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இலங்கைத் தமிழர்களின் நலனுக்காகப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்த எங்களுடைய அன்புத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள், தன்னுடைய இன்னுயிரையே இலங்கைத் தமிழர்களுக்காக அளித்தார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த வகையிலே. பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்துக் கொண்டிருக்கின்றது. எனவே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், இன்றைக்கு இங்கு நிறைவேற்றப்படக்கூடிய தீர்மானத்தை காங்கிரஸ் இயக்கத்தின் சார்பாக வரவேற்று அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

***திரு. ந. நஞ்சப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் முழுமையாக வரவேற்கிறோம். உலகம் எங்கும் இருக்கிற தமிழர்கள், இந்திய அரசு எடுத்த தவறான நடவடிக்கையால் நெஞ்சுடைந்து போன உலகத் தமிழர்கள் 10 கோடி பேர் நெஞ்சத்திலும் பாலை வார்த்ததுபோல, அன்னையாக அமர்ந்து இங்கு ஒரு சிறப்பான தீர்மானத்தைக் கொண்டு வந்ததற்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஈழத்தில் நடைபெறுவது இன்றோ, நேற்றோ தொடங்கப்பட்டது அல்ல. நீண்ட நெடிய நாட்களாக உரிமை பறிக்கப்பட்டு, முடியுரிமை பறிக்கப்பட்டு, வாழ்வுரிமையே பறிக்கப்படுகின்ற சூழ்நிலையில், இராணுவ ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டபோது மக்கள் சாதாரணமான உரிமைதான் கேட்டார்கள். ஆனால், படுகொலைதான் நிகழ்ந்தது. கற்பழிப்புதான் நிகழ்ந்தது. நீண்ட நெடிய இன அழிப்பை தொடர்ச்சியாக நடத்தி வந்தார்கள். இந்தத் தீர்மானத்தில் மிகச் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது இன ஒழிப்பு என்பதை மையப்படுத்தி சுட்டிக்காட்டியிருப்பதை நாம் முழுமையாக வரவேற்கிறோம்.

1947 ஆம் ஆண்டில் 40 இலட்சம் மக்கள் இருந்ததாக அங்கே கணக்கு காட்டப்படுகிறது. ஆனால், இன்றைக்கு வெறும் 18 இலட்சம் மக்கள்தான் இருப்பதாக கணக்கு கூறுகிறது. தொடர்ச்சியாக இன ஒழிப்பு நடைபெற்று வந்திருக்கிறது.

[திரு. ந. நஞ்சப்பன்] [2011 ஜூன் 8

அதுவும் சொல்லப்போனால் அவர்களுடைய நிலம் பறிக்கப்பட்டது, உரிமை பறிக்கப்பட்டது, கலாச்சாரம் மறுக்கப்பட்டது, மொழி மறுக்கப்பட்டது. உச்சகட்டமாகத்தான் அங்கு இருக்கிற இளைஞர்கள் போராடத் தொடங்கினார்கள். அது விடுதலைப் புலிகளா? ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியா? TELO-வா என்ற கணக்கெல்லாம் பார்க்க வேண்டியதில்லை. நீண்ட நெடிய தமிழர்கள் போராட்டம் அது. உரிமை மறுக்கப்பட்டதால் எழுப்பப்பட்ட போராட்டம். ஆனால், அங்கு நடைபெற்றது இன அழிப்பு முறைதான், இனப் போர்தான். இந்த இனப் படுகொலையை இந்திய அரசே முன்னின்று நடத்தியிருக்கிறது என்பதுதான் எதார்த்தமான உண்மை.

மத்திய அரசு, சிங்கள அரசிற்கு, இலங்கை அரசிற்கு இராணுவத் தளவாடங்கள், பொருளாதார உதவிகள், இராணுவ இரகசியப் பயிற்சிகள் போன்ற அனைத்து உதவிகளையும் செய்து கொடுத்ததோடு, இந்தியத் தூதர்கள், இந்திய இராணுவத் தளபதிகள் அனைவரும் அங்கு அமர்ந்துகொண்டு, அந்தப் போரை வழி நடத்தினார்கள். அங்கேயிருக்கிற ஈழத் தமிழர்களைப் படுகொலை செய்வதற்கு இந்திய அரசே காரணமாக இருந்திருக்கிறது. மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களும், மறைந்த பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களும் ஈழப் பிரச்சினையில் சரியான நிலை எடுத்திருந்தார்கள். ஆனால், இன்றைய காங்கிரஸ் தலைமை தடம் புரண்டு போயிருக்கிறது. அதற்குத் தமிழகத்தில் இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசும், அதன் கூட்டணிக் கட்சிகளும், அதன் கூட்டணியாக இருந்தும்கூட, எவ்விதமான எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை என்பது மட்டுமல்ல; சாதாரணமான தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்; வெற்றுத் தீர்மானமாகத்தான் அது இருந்தது. ஆக, இன்றைக்கு ஈழப் படுகொலைக்கு மூல காரணம் இந்திய அரசினுடைய கொடூர நடவடிக்கை என்றுதான் உலக அரங்கிலேயே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையில் ஏற்கெனவே இலங்கைக்கு ஆதரவாக இந்திய அரசு சென்றிருக்கிறது. இன்றைக்கு ராஜபக்சேவைப் போர்க் குற்றவாளி என்று அறிவித்திருக்கிற நிலையில், ஐக்கிய நாடுகள் சபையும் அறிவித்திருக்கிற நிலையில், ஐக்கிய (குறுக்கீடு) . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்த பிறகு வாய்ப்பு தருகிறேன்.

2011 ஜூன் 8]

**திரு. ந. நஞ்சப்பன்:** ஐரோப்பிய தேசங்கள் எல்லாம் ஒன்றுகூடி அங்கே விவாதம் நடத்திக் கொண்டிருக்கின்ற நிலையில், இந்திய அரசு மௌனம் சாதிக்கிறது. இந்திய அரசு இனப் படுகொலைக்கு ஆதரவாக இருக்கிறது என்பதைத்தான் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, உலகம் எங்கும் நடக்கிற இனப் படுகொலையை, ஜனநாயகப் படுகொலையைக் கண்டித்த இந்தியா உலக அரங்கில் தன்னிகரற்ற முத்திரைப் பதித்த இந்தியா, இன்றைக்குத் தடம் புரண்டுபோய் இருப்பதை வேதனையோடு பார்க்கிறோம். ஆக, அதன் பார்வையில் மாறுதல் வேண்டும். இந்திய அரசு அதனுடைய போக்கில் மாற்றத்தைக் காண வேண்டும். இந்திய அரசிற்கு ஈழ மக்களைப் பாதுகாப்பதில் தார்மீக உரிமை உண்டு. இந்திய இலங்கை ஒப்பந்தங்கள் என்ன ஆயின? இலங்கைக்குச் சிக்கல் வரும்பொழுதெல்லாம் ஓடோடிச் சென்ற இந்தியாவினுடைய குரல் என்ன ஆனது? அங்கு இருக்கிற சிங்கள அரசு, அதைத் தூக்கி எறிந்துவிட்ட நிலையைத்தான் நாம் தொடர்ந்து பார்த்திருக்கிறோம். ஆக, உலக அரங்கில் இன்றைக்குத் தனிமைப்படுத்தப்பட்டிருக்கிறது ராஜபக்சேவின் இலங்கை அரசு. எனவே, அவருக்கு ஆதரவாக இந்திய அரசு நடவடிக்கை எடுத்தால், நிச்சயமாக இந்தியாவில் வேறுவிதமான எதிர்ப்புணர்வுகள் கிளம்பும் என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டுகிறேன்.

முற்பகல் 10-50

தமிழ் மீனவர்கள் 500 பேருக்குமேல் படுகொலை செய்யப்பட்டபோது இந்திய அரசு வேடிக்கை பார்க்கிறது. பாகிஸ்தான்கூட இந்தியாவிற்குப் பகை நாடுதான். உலகில் எந்த நாடும் மீனவர்களைச் சுட்டுக் கொன்றதில்லை; பாகிஸ்தான்கூட சுட்டுக் கொன்றதில்லை. இலங்கை அரசு 500 பேரை சுட்டுக் கொன்றிருக்கிறது. ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களைக் காயப்படுத்தி இருக்கிறது. இந்திய அரசு அவ்வப்போது ஆலோசனை சொல்லுகிறதே தவிர, அதற்கு நிரந்தரத் தீர்வு என்பது நிச்சயமாக வரவில்லை. ஆகவே, இவ்வாறு நிலை எடுத்தால் இந்திய நாட்டின் ஒன்றுமையையும், ஒருமைப்பாட்டையும் காப்போம் என்று சபதம் ஏற்று இருக்கிற நாம், அந்த ஒற்றுமைக்கு வேட்டு வைக்கிற காரியத்தை மத்திய அரசே செய்கிறது என்பதுதான் இந்த நேரத்திலே வெளிப்படுத்தக்கூடிய ஒன்றாக இருக்கும். ஆக, மத்திய அரசு தன்னுடைய போக்கில் மாற்றம் காணாவிட்டால் இந்தத் தேர்தலில்

[திரு. ந. நஞ்சப்பன்] [2011 ஜூன் 8

மக்கள் பலத்த அடி கொடுத்தார்களே, அதுபோல வருங்காலத்திலும் இங்கே வேறுவிதமான எதிர்ப்புணர்வு கிளம்பும். அது நிச்சயமாக வெடித்துக் கிளம்புகிறபோது ஆட்சியாளர்கள் அதற்குரிய தண்டனையை அனுபவிக்க வேண்டிய கட்டாயம் வரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, வெற்றுத் தீர்மானமாக இல்லாமல், போர்ப் பிரகடனமாக இந்த அவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். உலகம் எங்கும் இதை வரவேற்பார்கள். நிச்சயமாக இந்தத் தீர்மானம் வெற்றி பெறுகின்ற அளவுக்கு இந்த அரசு தொடர்ந்து முன்முயற்சிகளை எடுக்கும் என்கின்ற நம்பிக்கையோடு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து விடைபெறுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோபிநாத், என்ன சொல்லப் போகிறீர்கள்?

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்டை மாநிலமான சிலோன் பிரச்சினையில், தமிழ்நாட்டில் இருக்கிற அத்தனை கட்சிகளும் கட்சி வேறுபாடில்லாமல் நம்முடைய தொப்புள்கொடி உறவின் பிரச்சினைகளைப் பேசிக் கொண்டிருக்கிறோம். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியும் இதை வரவேற்றது. ஆனாலும்கூட, இதற்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தான் ஏதோ நேராகச் சென்று அங்கு இருக்கிற பிரச்சினைகளைப் பார்த்ததுமாதிரி, மத்திய அரசாங்கத்தைத் தாக்கிப் பேசியிருக்கிறார். Actual-ஆக மத்திய அரசினால்தான் இந்த அளவுக்கு நம்முடைய தமிழ்ச் சகோதரர்களுக்கு உதவி செய்யப்பட்டுள்ளது. எங்கள் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களையே நாங்கள் பலிகொடுத்தோம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரெங்கராஜன் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். இப்போதுகூட அங்கிருக்கிற தமிழின மக்களுக்காக மத்திய அரசாங்கம் என்னென்ன உதவிகள் செய்திருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருமே அந்தப் பிரச்சினையில் ஒன்றாக இருந்து, அங்கு இருக்கிற தமிழ் மக்களுக்காக நாம் குரல் கொடுக்கின்ற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் மத்திய அரசை தாக்கிப் பேசியவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று சொல்லி, அதை வன்மையாக நான் கண்டிக்கிறேன்.

2011 ஜூன் 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அங்கே நடந்த எதார்த்தத்தைத்தான் அவர் குறிப்பிட்டார். அவர் ஒன்றும் தாக்கிப் பேசவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ராஜீவ் காந்தி கொலை என்பது யாரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய செயல் அல்ல. இன்றைக்கு முதல்வராக இருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட திரு. ராஜீவ் காந்தியினுடைய மரணத்தை வன்மையாகக் கண்டித்து, அதற்கு நியாயம் வழங்கவேண்டும் என்பதற்காக எவ்வளவு அழுத்தமாகத் தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள் என்பதைத் தமிழகம் அறியும். திரு. ராஜீவ் காந்தி மரணமடைந்த நேரத்தில் அவரோடு உடன் இருந்த எங்களுடைய மாநிலச் செயலாளர் திரு. தா. பாண்டியன் அவர்கள் குண்டுக் காயங்களால் பாதிக்கப்பட்டு, இன்றும் அந்தக் குண்டுத் துகள்களை உடலிலே தாங்கிக் கொண்டிருக்கிறார் என்பதையும் காங்கிரஸ் கட்சி நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, அது வேறு ஒரு சம்பவம். ஆனால், இலங்கையிலே சமீபத்தில் நடைபெற்ற போர் என்பது, ஒரு இன அழிப்புப் போராக, அப்பாவி மக்களைத் தாக்கி, பெண்கள் என்றும், குழந்தைகள் என்றும் பார்க்காமல், ஒரு இனத்தையே அழித்த இனப் போர். அந்தப் போரை நேரடியாக ராஜபக்சே நடத்தினாலும், மறைமுகமாக இந்திய அரசாங்கம் இராணுவ உதவிகளை அனுப்பி, தொழில்நுட்ப உதவிகளை அனுப்பி, இராணுவ நிபுணர்களை அனுப்பி, நமது வரிப் பணத்திலிருந்து ஏவப்பட்ட விண்கலங்களிலிருந்து, செயற்கைக்கோள்களிலிருந்து எப்படியெல்லாம் அங்கே மக்கள் நகர்கிறார்கள் என்பதையும் பார்த்து, அவர்களுக்கு உதவிகளைச் செய்ததன் மூலமாகத்தான் இவ்வளவு பெரிய அழிவு ஏற்பட்டது என்பதை ஐ.நா.-வினுடைய அறிக்கை அப்பட்டமாக வெளிப்படுத்தியிருக்கிறது. அந்த விஷயத்திற்குள்ளே இப்போது போனால் அதிக நேரமாகிவிடும். ஆனால், இவ்வளவு நடந்தும், அன்றைக்கு இங்கே இருந்த மாநில அரசு, மத்திய அரசிலே தொடர்ந்து இடம் வகித்தாலுங்கூட, தீர்மானங்களை நிறைவேற்றினார்களே தவிர, இந்த யுத்தத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு ஒருமுறைகூட ஆக்கப்பூர்வமான நடவடிக்கையை எடுக்கவில்லை என்பது தமிழகத்தினுடைய வரலாறு. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட நிலையில், இப்போது

ஐ.நா. ஒரு குழுவை அனுப்பி, ஒரு அறிக்கை வெளியிட்டதற்குப் பின்னால், ஒரு அகிம்சையை விரும்பக்கூடிய, இன்னும் சொல்லப்போனால் உலக அளவிலே நடுநிலை நாடுகளுக்குத் தலைமையேற்ற non-aligned countries-க்குத் தலைமையேற்ற இந்திய நாடு, வெளியுறவுக் கொள்கையில் தடம் புரண்டு, இந்த ஐ.நா. அறிக்கையை ஏற்று, இராஜபக்சேவை சர்வதேசக் குற்றவாளியாக அறிவிக்க வேண்டுமென்று எந்தவொரு வார்த்தையும் சொல்லாமல், ஐரோப்பிய நாடுகள் மனித உரிமையை வலியுறுத்தி அதற்கான நடவடிக்கையில் ஈடுபடுகிற நேரத்தில் தன்னுடைய ராஜ்ஜிய செல்வாக்குகளைப் பயன்படுத்தி, ஒவ்வொரு நாடாகச் சென்று இன்றைக்கு அந்த அறிக்கையை வெளியிடாமல் தடுப்பதற்கும், அந்த அறிக்கையின்மீது நடவடிக்கைகள் எடுக்காமல் இருப்பதற்குமான முயற்சிகளை செய்து கொண்டிருக்கிறார்கள். இது இன்றைக்கு உலகம் அறிந்த உண்மை.

*முற்பகல் 10-55*

எனவேதான், தமிழக மக்கள் கடந்த தேர்தலிலே காங்கிரஸ் கட்சியைத் துடைத்தெறிந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை, தமிழர் விரோத இயக்கமாக, கட்சியாக மாறியிருக்கிறது. 1956-இலே திராவிட முன்னேற்றக் கழகத்தைத் துவக்கிய நேரத்திலே அறிஞர் அண்ணா அவர்கள், "காங்கிரஸ் கட்சி இந்த மண்ணுக்குச் சொந்தமல்ல, காங்கிரஸ் கட்சி தமிழருக்கு விரோதமான இயக்கம்" என்று இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை எப்படி நடத்தினாரோ அந்தக் கொள்கை காங்கிரஸ் கட்சிக்கு இன்றும் தொடர்கிறது. எனவே, காங்கிரஸ் கட்சி மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சியோடு துணை நிற்கிற அத்தனை இயக்கங்களுமே தமிழர்களைக் காட்டிக் கொடுக்கிற இயக்கங்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** 'சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்' என்று சொல்லத்தக்க, மிகப் பெரும் கொடுமையை கடந்த 25 ஆண்டுக்காலமாக இலங்கையிலே தமிழர்களுக்கு எதிராக அந்த அரசு போர்க் குற்றங்களை, மனித உரிமை மீறல் குற்றங்களை நடத்தியது. தமிழர்களுக்கு ஏற்கெனவே அங்கே இருந்த சம உரிமை

2011 ஜூன் 8] [திரு. அ. சவுந்தரராசன்]

பறிக்கப்பட்டு, மெல்ல மெல்ல தமிழ் மக்களுடைய வேலைவாய்ப்பு சுருக்கப்பட்டு, இனி வாழ வழியில்லை என்கிற நிலையிலேதான் தமிழ் மக்களும் புதியதாக இருந்த பல்வேறு அமைப்புகளும் ஒன்றாகச் சேர்ந்து தமிழ் மக்களுடைய நியாயங்களை நிலைநாட்ட போராட்டத்தைத் தொடங்கினார்கள். இந்தப் போராட்டக் காலம் முழுவதும் தமிழ் மக்கள் கண்ணீரிலும், செந்நீரிலும் குளித்தார்கள்.

தமிழ்நாட்டினுடைய மிக உயர்ந்த மன்றமான இந்த மன்றத்திலிருந்து இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை எதிர்த்தும், அந்த மக்களோடு நம்முடைய ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தவும் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்திருக்கிற நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வரை நான் மனதாரப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த மனித உரிமை மீறல்களுக்கான விளக்கங்கள் இந்தத் தீர்மானத்திலேயே விரிவாக இருக்கின்றன. இன்னொரு நாடு என்கிற வகையில் அந்த நாட்டில் அவர்கள் என்ன செய்வார்கள், செய்யமாட்டார்கள் என்பது ஒரு பக்கம். ஆனால், அந்த நாட்டிலேயும் மனித உரிமைகளை விசாரிக்கக்கூடிய ஆணையம் இருக்கிறது. அந்த நாட்டிலேயும் இதுபோன்ற சம்பவங்களை விசாரிப்பதற்கான, உச்ச நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட உயர் மட்டக் குழுக்களை அமைக்க முடியும். நம்முடைய தீர்மானத்தில், அவர்கள் செய்கிறார்கள், இல்லை என்பது பிரச்சினையில்லை. அதிலேயும் அவர்கள் தவறிழைத்தால், அதிலேயும் அவர்கள் செய்ய மறுத்தால், நாம் இதைக்கூட செய்ய மறுக்கிற ஓர் அரசு என்று சொல்ல வாய்ப்பு இருக்கிறதென்கிற வகையில் இலங்கையில் இருக்கிற மனித உரிமை ஆணையம், இலங்கையில் இருக்கிற உச்ச நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி உள்ளிட்டவர்கள் உள்ளிட்ட ஒரு விசாரணையை அங்கே நடத்த வேண்டும். காரணம், ஐக்கிய நாட்டுச் சபையிலிருந்து நான் ஒரு குழுவை அனுப்புகிறேன் என்ற ஐ.நா. பொதுச் செயலாளர் சொன்னபோது, அந்தக் குழுவை இலங்கைக்குள் அவர்கள் அனுமதிக்கவில்லை. இப்போது அறிக்கை வெளியிட்டிருக்கிற அந்தக் குழுவும்கூட இலங்கைக்குள் செல்லாமலேயே, கிடைக்கிற எல்லா தகவல்களையும் வைத்துக்கொண்டுதான் அவர்கள் இந்த அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். அந்த அறிக்கையிலேயே இவ்வளவு பெரிய கொடுமைகள். மருத்துவ உதவிகளைச் செய்ய செஞ்சிலுவைச் சங்கத்தை அனுமதிக்க முடியாது என்கிற அளவுக்கு

[திரு. அ. சவுந்தரராசன்] [2011 ஜூன் 8

மருத்துவமனைகள்மீது குண்டு வீச்சு, செஞ்சிலுவைச் சங்கத்தை அனுமதிக்க முடியாது, உணவு கொடுக்க முடியாது, மருந்து கொடுக்க முடியாது, எங்களுக்கு எதிராக இராணுவமே கொடுமை செய்கிறது என்ற புகார்களுக்கு எந்தவிதமானத் தீர்வும் இல்லை. மக்களை ஒரே இடத்தில் அவர்கள் குவித்து வைத்ததுகூட விடுதலைப் புலிகளுடைய ஆயுதத் தாக்குதல்களிலிருந்து தங்களைத் தற்காத்துக்கொள்வதற்கான ஒரு மனிதத் தடையாகவே அவர்கள் வைத்திருந்தார்களோ என்று கருதத்தக்க அளவுக்கு அந்தப் பகுதியிலே மக்கள் குவித்து வைக்கப்பட்டார்கள். அதனால் மக்கள் உயிரிழந்தார்கள். ஆகவே, இந்தக் கொடுமையை நிகழ்த்தியவர்கள் ஓர் அரசு. இந்தக் கொடுமையை நிகழ்த்தியவர்கள் ஓர் இராணுவம். ஒரு அரசுக்கு மனித உரிமையை மீறுகிற உரிமை கிடையாது. ஒரு இராணுவம் எந்தச் சூழ்நிலையிலும் மனித உரிமையை காலில் போட்டு மிதிக்கக்கூடாது. மனித உரிமைகளையும், இதர உரிமைகளையும், அடிப்படை உரிமைகளையும் காப்பாற்ற வேண்டிய அரசும், இராணுவமும், போலீசும், அவற்றை மீறி, "வேலியே பயிரை மேய்ந்ததைப்போல்" ஒரு நிலைமையை உண்டாக்குவார்களானால், அது மிகப்பெரிய கொடுமை. அந்தக் கொடுமை இலங்கையிலே நிகழ்ந்திருக்கிறது. ஆகவே, அதற்கு எதிராக நாம் நியாயம் கேட்டுத்தான் தீரவேண்டும். இன்னொரு நாடு என்கிற வகையிலே மத்திய அரசாங்கத்தை நாம் வலியுறுத்த வேண்டியிருக்கிறது. இப்போது மத்திய அரசாங்கத்திற்கு எதிரான தீர்மானத்தை நாம் கொண்டு வந்திருக்கிறோம். மத்திய அரசாங்கத்திற்கு நான் உதவி கேட்டு அல்லது நடவடிக்கை கேட்டு ஒரு கடிதம் எழுதிவிடுகிறேன் என்று சொல்லி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கையைக் கழுவிவிட்டிருக்கலாம். ஆனால் அப்படி கையைக் கழுவாமல் இந்த மன்றத்தின் தீர்மானமாகவே கொண்டு வந்திருப்பது என்பது இன்னொரு பாராட்டுக்குரியது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால் ஏற்கெனவே அதற்கு முன் உதாரணங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே இங்கே அஞ்சல்வழி என்பதுதான் ஒரு மிக முக்கியமான அரசியல் வழியாகவே இருந்திருக்கிறது. அவருக்கு ஒரு முற்றுப்புள்ளி இங்கே வந்திருக்கிறது.

*முற்பகல் 11-00*

இந்தத் தீர்மானத்தை நான் வழிமொழிகிறபோது, கனிவோடு முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு ஒன்றைக்

2011 ஜூன் 8] [திரு. அ. சவுந்தரராசன்]

கொண்டுவருகிறேன். ஒரு அறிவுரையாக அல்லது மற்றதாக நான் சொல்கிறேன் என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. கனிவோடு ஒரு விஷயத்தை நான் சொல்ல விரும்புகிறேன். ஒரு பொருளாதாரத் தடை என்று அந்தத் தீர்மானத்தில் நாம் முன் வைக்கக்கூடிய அந்த ஆலோசனை, உலகம் முழுவதும் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட நாடுகளில், யார் இந்தக் குற்றத்தைச் செய்தானோ, அவன் அந்தத் தடையால் பாதிக்கப்படவில்லை. போர்க் குற்றத்தைச் செய்த இராணுவம் அல்லது போர்க் குற்றத்தைச் செய்த ஆட்சியாளர்கள் இதனால் பாதிக்கப்படப் போவதில்லை. அமெரிக்கா பல நாடுகளின்மீது இதேபோன்ற பொருளாதாரத் தடையை இஷ்டத்திற்கு விதித்தது; ஈராக்கின் மீது விதித்தார்கள். விளைவு, 10 இலட்சம் குழந்தைகள் செத்துமடிந்தன. ஈராக்கில் இப்பொழுது ஒரு தலைமுறையே இல்லை. அநேகமாக 20 வயது வாலிபன் இன்றைக்கு ஈராக்கில் இல்லை என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். கடந்த 20 ஆண்டுகளாக இருந்த அந்தப் பொருளாதாரத் தடை காரணமாக, குறிப்பாக, பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட நாடுகளிலே, பெண்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள். குழந்தைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள். இப்போது நாம் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுகிறபோது, இலங்கை இராணுவம், ஆட்சியாளர்கள் இந்தப் போர்க் குற்றத்திற்குக் காரணமானவர்கள் என்பவர்களையும், இலங்கை மக்களையும், நம்முடைய தமிழ் மக்கள் உட்பட அவர்களையும் பிரித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கருதுகிறேன். இந்தப் பொருளாதாரத் தடை மிச்சம் இருக்கிற நம்முடைய சொந்தத் தமிழர்களையும் பாதித்துவிடுமோ என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகுந்த பாசத்தோடு, கனிவோடு நிச்சயமாகப் பார்ப்பார்கள்; பார்க்க வேண்டும் என்பது என்னுடைய பணிவான வேண்டுகோள். அந்த அடிப்படையிலே பொருளாதாரத் தடை எல்லோரையும் பாதிக்கும். அங்கு இருக்கிற குழந்தைகளைப் பாதிக்கும், மற்றவர்களைப் பாதிக்கும் என்பதால் குற்றம் இழைத்தவர்களை நாம் தனியாக pin point பண்ணி அவர்களுக்கு எதிரான நடவடிக்கையை, நாம் வலியுறுத்துவதிலே தவறில்லை, வலியுறுத்துவது என்பது மிகமிக அவசியம். அந்த அடிப்படையிலே நான் என்னுடைய ஒரு திருத்தத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இந்த மத்திய அரசாங்கம் இவ்வளவு பெரிய கொடுமை நிகழ்வதற்கு இடையிலேயே வலுவாக ராஜ்ய ரீதியாக தலையிட்டு இருப்பார்களானால், இலட்சக்கணக்கான

[திரு. அ. சவுந்தரராசன்] [2011 ஜூன் 8

அல்ல; பல ஆயிரக்கணக்கான தமிழர்களைக் காப்பாற்றியிருக்க முடியும். மிக வலுவாக, ராஜ்ய ரீதியாக மத்திய அரசாங்கம் தலையிட்டு இருக்குமானால், இன்றைக்கு நாம் இவ்வளவு பெரிய புலம்பல்களைக்கூட நடத்த வேண்டிய தேவை இருந்திருக்காது. உள்நாட்டில் நடக்கிற விஷயம் வேறு. எந்த நாடாக இருந்தாலும் மனித உரிமை மீறப்படுவது என்பது வேறு. அது சர்வதேசப் பிரச்சினை என்கிற அடிப்படையில் நாம் பார்க்கவேண்டிய பிரச்சினையாக இருக்கிறது. இதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கனிவோடு பார்க்க வேண்டும் என்று நான் சொன்ன அந்தத் திருத்தத்தோடு இந்தத் தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தி.மு.க. சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பில் நாங்கள் முதலிலேயே ஆதரிக்கிறோம். காரணம் இது தேவையான ஒன்று. இலங்கை வாழ் தமிழர் பிரச்சினை நீண்ட நெடுங்காலமாக இருக்கிற பிரச்சினை. தமிழ்நாட்டில் இருக்கிற எல்லா கட்சிகளும் ஒரு விதத்தில் அந்தப் பிரச்சினையை, இலங்கை வாழ் தமிழர்களை ஆதரித்து இருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் இருக்கிற கட்சிகள் ஒருவருக்கொருவர் மனமாச்சர்யங்களோடு இங்கே போரிட்டுக்கொண்டிருக்கிறோம். என்னைப் பொறுத்தவரையில், ஆயிரம் கருத்து வேறுபாடுகள் ஒவ்வொரு கட்சிக்கும் அணுகுமுறையிலே உண்டு. நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்; நாங்கள் என்ன செய்தோம் என்று பேசுகிற நேரம் இது அல்ல; பேசுகிற இடமும் இதுஅல்ல. பேசுவதற்கு அடுத்து இந்தத் தீர்மானத்தை விட்டு, General Discussion-லேகூட பல பிரச்சினைகளைப் பேசலாம். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானம், ஒட்டுமொத்தமாக இந்தச் சட்டமன்றத்தினுடைய ஏகோபித்தத் தீர்மானமாக தமிழ் மக்களுடைய குரலை எதிரொலிப்பதாக மத்திய சர்க்காருக்கும் தெரிவிக்க வேண்டும்; இலங்கை அரசும் அறிய வேண்டும்.

*முற்பகல் 11-05*

இலங்கையின்மீது இப்படிப்பட்ட ஒரு பொருளாதாரத் தடை விதிப்பது தேவையான ஒன்று. காரணம் இலங்கை அரசு

அட்டூழியம் செய்கிறது என்பதை நாம் பேசிக்கொண்டிருந்தோம், தமிழ் உணர்வுள்ளவர்கள் பேசிக் கொண்டிருந்தோம். தமிழ்நாட்டு மக்கள் பேசினார்கள். இந்தியத் திருநாட்டிலே ஜனநாயகத்திலே நம்பிக்கைக் கொண்ட சிலபேர் பேசினார்கள். ஆனால் இன்றைக்கு ஐ.நா.வினுடைய நடவடிக்கைக்குப் பிறகு உலகம் பேசுகிறது, இலங்கை அரசு தவறு இழைக்கிறது என்று. ஆக, இலங்கை அரசுமீது எத்தகைய தடைகளை விதித்தாலும் சரி, இங்கே நண்பர்கள் சுட்டிக்காட்டியதைப்போல், தூதுவருடைய உறவைத் துண்டித்தாலும் சரி, வேறு எத்தகைய நடவடிக்கைகளை இலங்கையின்மீது மத்திய அரசு எடுத்தாலும், உலகம் நம்மை வரவேற்கும். எனவே, அத்தகைய நிலையில் மத்திய அரசை நாம் ஒட்டுமொத்தமாக வற்புறுத்துகிறோம் என்பதற்கு அடையாளமாக எந்தவிதமான மனமாச்சர்யமும் இல்லாமல் இந்தத் தீர்மானத்தை நாம் ஒட்டுமொத்தமாக ஆதரிக்க வேண்டுமென்று வேண்டி விரும்பி வாழ்த்தி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

***திரு. விஜயகாந்த்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்தத் தீர்மானத்திற்கு எனது சார்பாகவும், எங்களது கட்சியின் சார்பாகவும் முதலில் நன்றியைத் தெரிவித்து வரவேற்கிறோம். அடுத்ததாக, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். இந்தப் பிரச்சினையை நாம் எப்படி அணுகவேண்டுமென்று, ஒரு சிறிய திருத்தத்தோடு உங்களிடம் சொல்லிக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினையைப்பற்றி போன தடவையே, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும், இதே சட்டமன்றத்தில் பேசினார்கள், அப்போது முன்னாள் முதலமைச்சர் அவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள், அவசர அவசரமாக உண்ணாவிரதம் இருந்து, குடும்பத்தோடு உண்ணாவிரதம் இருந்து, இடையிலே சண்டை நின்றுவிட்டது என்று சொன்னார். ஒரு முதலமைச்சர் அவர்கள் எந்தளவுக்குப் பேசினார்கள் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதே முதல்வர் மறுநாள் சொல்கிறார், “மழைவிட்டாலும் தூவானம் விடவில்லை என்று”. இதை எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் பேசினாலும், இது எந்தளவுக்கு சாத்தியம் என்று தெரியவில்லை. இப்போது வரவேற்பு முக்கியம் என்கிறார். அதேநேரத்தில் பாராளுமன்ற

[திரு. விஜயகாந்த்] [2011 ஜூன் 8

எம்.பி. குழுக்களை இலங்கைக்கு அனுப்பி, அவர்கள் எல்லோரும் இங்கே வந்து தமிழர்களுக்கு சம உரிமை வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னார்களே, (மேசையைத் தட்டும் ஒலி) இலங்கைத் தமிழர்கள் அங்கு எந்தளவுக்குப் பாதிக்கப்பட்டார்கள் என்பது இப்போது தெரியும். அதாவது ஐ.நா. சபை போர்க் குற்றவாளி என்று இராஜபக்சேவை சொல்கிறது. இதற்கு முன்னால் இருந்த அரசு சாட்சியாகத்தான் இதையெல்லாம் நான் பேசுகிறேன். பெயர்கள் வேண்டுமானால் எப்படியும் இருக்கலாம். தமிழ் இன சமுதாயத்தை அழித்த பெருமை யாருக்கு இருக்கும் என்றால் போன ஆட்சியாளர்களுக்குத்தான் இருக்கும் என்று அடித்துச் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் இதையெல்லாம் சொல்கிறேன் என்றால், கோபத்திலோ வேறு எதிலும் என்னுடைய பிரதிபலிப்பு இல்லை. முன்னொரு காலத்தில், சாலிகிராமத்தில் நான் குடியிருந்த இடத்தில்தான் இலங்கைத் தமிழர்களெல்லாம் இருந்தார்கள். அப்போது அவர்களுக்காக எவ்வளவோ பிரச்சினைகளை நான் சந்தித்திருக்கிறேன். அவர்களிடம் நான் பேசியிருக்கிறேன். அவர்கள் படிப்பதற்கும், இலங்கை செல்வதற்கும் நான் உதவி இருக்கிறேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பின் வரிசையில் அமர்ந்திருக்கும் உறுப்பினர்கள் அமைதியாக இருக்கவும். நீங்கள் பேசுங்கள்.

**திரு. விஜயகாந்த்:** இரண்டு நாட்களுக்கு முன்பு டி.வி.யிலே சொன்னார்கள். கிட்டத்தட்ட ஒரு பகுதியிலே 8 இலட்சம் தமிழர்களைக் காணவில்லை என்று. நான் சொல்லவில்லை; இலங்கை அரசின் மக்கள் தொகை கணக்கெடுப்பில் சொல்கிறார்கள். இதை நான் டி.வி.யிலும் பார்த்தேன்; நாளிதழிலும் படித்தேன். அந்த 8 இலட்சம் பேரில் கிட்டத்தட்ட 4 இலட்சம் பேர் எங்கே இருக்கிறார்கள் என்று இலங்கை அரசைக் கேட்டதற்கு, முள்வேளியில் 40 ஆயிரம் தமிழர்களைக் கொன்றது போக, மீதி 4 இலட்சம் தமிழர்கள் எங்கே என்று கேட்கும்போது, தெரியாது; வெளிநாட்டிற்குச் சென்று இருக்கலாம் என்று வாய்கூசாமல் சொல்கிறார்கள். இந்த நான்கு இலட்சம் பேர் எங்கே போயிருக்கிறார்கள் என்று கேட்கிறார்கள். அந்தளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் இலங்கைத் தமிழர்கள்.

அதேமாதிரி எதிர்க்கட்சி உறுப்பினர் காங்கிரஸ் கட்சியை இந்த மாதிரி பழி கூறவேண்டாம் என்று சொன்னார். எனக்கு இதில்

2011 ஜூன் 8] [திரு. விஜயகாந்த்]

என்ன தோன்றுகிறது என்றால், எல்லோருமாக சேர்ந்து 1972 இல் இருந்து வஞ்சிக்கப்பட்டது தமிழ்நாடு. திராவிட முன்னேற்றக் கழகத்தால் வஞ்சிக்கப்பட்டே இருந்துவந்திருக்கிறது தமிழ்நாடு. காவிரி பிரச்சினையாக இருந்தாலும் எந்தப் பிரச்சினையைத் தொட்டாலும், இன்றுவரை தமிழ்நாடு பாதிக்கப்பட்டது திராவிட முன்னேற்றக் கழகத்தால்தான். (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்துவிடுகிறேன். பிறகு யாராக இருந்தாலும் பேசலாம். (குறுக்கீடுகள்) இதை ஏன் நான் சொல்கிறேன் என்றால், பேப்பரில் படித்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடுகள்) நான் குறுக்கீட்டை allow பண்ணவில்லை. (குறுக்கீடுகள்) I am not allowing. Please sit down. உட்காருங்கள், அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. விஜயகாந்த்:** இதை நான் சொல்லவில்லை. வரலாறு சொல்கிறது. இதை ஏன் நான் சொல்கிறேன் என்றால், பேப்பரில் படித்து மீட்டிங்கில்கூட பேசினேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Please sit down. உட்காருங்கள். அவர் பேசிமுடிக்கட்டும். உட்காருங்கள், உட்காருங்கள் (குறுக்கீடுகள்). அவர் சொல்லி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) ஒரு எதிர்க்கட்சித் தலைவர் பேசுகிறார். நீங்கள் குறிப்பெடுத்துக்கொள்ளுங்கள். பின்னர் பேசலாம். (குறுக்கீடு) திரு. விஜயகாந்த், பேசுங்கள்.

முற்பகல் 11-10

**திரு. விஜயகாந்த்:** நீங்கள் பதில் சொல்லும்போது சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) ஆகையினாலே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசட்டும். நான் இப்போது குறுக்கிட allow செய்யவில்லை. (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். I am not allowing.

**திரு. விஜயகாந்த்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்திற்கு நாங்கள் வரவேற்புக் கொடுக்கிறோம். (குறுக்கீடுகள்) பொருளாதாரத் தடையை விதிக்க வேண்டுமென்று நாங்கள் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் தன்னுடைய கருத்தை இங்கே சொல்கிறார். முதலில் அவர் என்ன சொல்கிறார் என்று கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்)

I am not allowing. Please sit down. *(குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள்.*

**திரு. விஜயகாந்த்:** *சாதாரண குடிமகனாக இருந்து, சட்டமன்ற உறுப்பினராக ஆனவன். (குறுக்கீடுகள்) நான் பாதிக்கப்பட்டவன். (குறுக்கீடுகள்) விவசாய மக்கள் பாதிக்கப்பட்டதால் நான் பேசுகிறேன். பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடுகள்)*

**திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, இல்லை. நீங்கள் உட்காருங்கள். உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் பேசி முடிக்கட்டும்.*

**திரு. விஜயகாந்த்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இன்றைக்கு இவ்வளவு தூரம் குரல் கொடுக்கிறார்கள். கடந்த ஆட்சியிலே அவர்கள் எங்களைப் பேச விட்டார்களா? இங்கேயிருக்கிற சட்டமன்ற உறுப்பினர் யாருக்காவது சபையிலே பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தார்களா? வாய்ப்புக் கொடுக்காதவர்கள்தான் இன்றைக்குப் பேசுகிறார்கள். நான் அன்றைக்கு இதே இடத்திலே உட்கார்ந்திருந்தேன். முதன்முதலாகப் பேசும்போது 1/2 மணி நேரம், அதன்பிறகு 20 நிமிடங்கள், பிறகு 10 நிமிடங்கள், பேரவைத் தலைவரிடம் கேட்டால் 5 நிமிடம் கொடுத்தார்கள். இன்றைக்கு உண்மையைச் சொல்கிறேன். உண்மையிலேயே நான் தேர்தல் பிரச்சாரத்திலே பேசும்போது, அவர்கள் பதில் குரல் கொடுத்தார்களா? இன்றைக்கு சட்டசபையிலே மட்டும் பேசுகிறார்களே? (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவர் பேசி முடிக்கட்டும். எதிர்க்கட்சித் தலைவர் பேசட்டும்.*

**திரு. விஜயகாந்த்:** *என்னுடைய உணர்வுகளை இங்கே நான் பிரதிபலிக்கிறேன். அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் அவருடைய உணர்வுகளை இங்கே பிரதிபலித்திருக்கிறார்கள். அதை நானும், என்னுடைய கட்சியும் வரவேற்கிறோம் என்று சொல்லிக்கொண்டு அமர்கிறேன். (குறுக்கீடுகள்) நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

2011 ஜூன் 8]

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசிவிட்டீர்கள். (குறுக்கீடு) அவருடைய கருத்தை அவர் சொல்லிவிட்டார். வேறொரு சந்தர்ப்பத்திலே நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தீர்மானத்தில் என்னையும் இணைத்துக்கொள்கின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை நாட்டிற்கு பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து விடுதலை கிடைத்துவிட்டாலும், அங்கு வாழும் தமிழர்கள், தங்கள் சொந்த நாட்டிலேயே இரண்டாம் தர குடிமக்களாகக் கருதப்பட்டனர். இதனையடுத்து, தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரசின் அடக்குமுறைகளை எதிர்த்தும் "சுயாட்சி அந்தஸ்து" தனி ஈழம் உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தியும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு உட்பட பல்வேறு தமிழ் அமைப்புகள் 1980-களிலிருந்து தொடர்ந்து குரல் எழுப்பிப் போராடியதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட தமிழ்நாட்டிலுள்ள அத்தனை அரசியல் கட்சிகளும், தமிழக மக்களும், இலங்கைத் தமிழர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதிலும், அவர்களுக்குச் சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதிலும் மிகுந்த விருப்பம் கொண்டிருந்தார்கள். இது மட்டுமல்லாமல், அவர்களுக்குத் தங்களுடைய தார்மீக ஆதரவினையும் அளித்தனர்.

இந்தச் சூழ்நிலையில், தமிழீழம் என்ற போர்வையில் தீவிரவாதம் தலைதூக்க ஆரம்பித்து, இதன் காரணமாக, தமிழ்ச் சகோதரர்களே படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் எல்லாம் நடந்தேறின. இதன் உச்சகட்டமாக இந்திய நாட்டின் பாதுகாப்பிற்கும், இறையாண்மைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் ஊறு விளைவிக்கும் வகையில், முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள், விடுதலைப் புலிகள் அமைப்பினரால் 1991 ஆம் ஆண்டு தமிழ் மண்ணில் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டார்.

இதனையடுத்து, விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதிருந்த அனுதாபம் கடுமையான எதிர்ப்பாக மாறிவிட்டது.

1992 ஆம் ஆண்டு நான் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது, என்னுடைய வற்புறுத்தலின்பேரில், விடுதலைப் புலிகள் இயக்கத்தை 1967 ஆம் ஆண்டு சட்ட விரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின்கீழ் மத்திய அரசு தடை செய்து, அந்தத் தடை உத்தரவு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நீட்டிக்கப்பட்டு வருகிறது.

முற்பகல் 11-15

இது மட்டுமல்லாமல், முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கொலையில் முதல் குற்றவாளி பிரபாகரனை உடனடியாக இலங்கை அரசு கைது செய்து இந்திய அரசிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும், தடை செய்யப்பட்ட இயக்கத்தைச் சார்ந்த எவரையும் இந்தியாவிற்குள் நுழைய அனுமதிக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மத்திய அரசை வலியுறுத்தி 2002 ஆம் ஆண்டு இந்தச் சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இலங்கை அரசின் அதிபராக திரு. மஹிந்தா ராஜபக்சே பொறுப்பேற்றுக் கொண்டார். 2006 ஆம் ஆண்டு மே மாதத்தில் தமிழகத்திலும் துரதிருஷ்டவசமாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. மைனாரிட்டி தி.மு.க. அரசுக்கு திரு. மு. கருணாநிதி தலைமை வகித்தார். மத்தியிலும், தி.மு.க. அங்கம் வகிக்கும் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சி 2004 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது.

இந்தச் சூழ்நிலையில், இலங்கையில் அமைதியை ஏற்படுத்தும் போர்வையில் தமிழர்கள் மீதான அடக்குமுறைகளை இலங்கை அரசு கட்டவிழ்த்துவிட ஆரம்பித்தது. 2008 ஆம் ஆண்டு துவக்கத்தில், இலங்கை இராணுவத்தினர் 100 பேருக்கு அரியானா மாநிலத்தில் இந்திய இராணுவம் இரகசியமான முறையில் போர் பயிற்சி அளித்ததாகவும், இலங்கை இராணுவத்தினருக்கு அதிநவீன ரேடார் கருவிகள் உட்பட பல்வேறு வகையான ஆயுதங்களை இந்திய அரசு வழங்கியதாகவும், இந்திய இராணுவத்தின் மூத்த அதிகாரிகள் சிலர் இலங்கை சென்று வந்ததாகவும், அப்போது ஊடகங்களில் செய்திகள் வந்தன.

2011 ஜுன் 8] [செல்வி ஜெ ஜெயலலிதா]

அப்போது முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதிக்கு இவை அனைத்தும் நன்கு தெரிந்திருக்கும். இந்தியாவிடமிருந்து தனக்குத் தேவையான இராணுவ உதவிகளைப் பெற்றுக்கொண்ட இலங்கை இராணுவம், 2008 ஆம் ஆண்டு இறுதியிலும், 2009 ஆம் ஆண்டு துவக்கத்திலும் இலங்கைத் தமிழர்களைக் கடுமையாகத் தாக்க ஆரம்பித்தது.

இலங்கையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த, இலங்கை அரசை மத்திய அரசு நிர்ப்பந்திக்க வேண்டுமென மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தி.மு.க. வலியுறுத்த வேண்டுமென்றும், இதற்கு காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு செவிசாய்க்கவில்லையெனில், மத்திய அரசுக்கு அளித்துவரும் ஆதரவினை தி.மு.க. விலக்கிக்கொள்ள வேண்டுமென்றும் நான் பலமுறை வற்புறுத்தினேன். ஆனால், அப்போது மைனாரிட்டி தி.மு.க. அரசின் முதலமைச்சராக இருந்த கருணாநிதியோ அதைச் செய்யவில்லை. மாறாக, "அனைத்துக் கட்சிக் கூட்டம்", "சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டம்", "தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தீர்மானம்", "மனிதச் சங்கிலி போராட்டம்", "பிரதமருக்குத் தந்தி", "நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராஜினாமா என்ற அறிவிப்பு", "இராஜினாமா கடிதங்களைத் தானே பெற்றுக்கொண்டது", "இறுதி எச்சரிக்கை என்ற அறிவிப்பு" என பல்வேறு வகையான நாடகங்கள்தான் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதியால் நடத்தப்பட்டன.

இவற்றின் உச்சகட்டமாக, காலை சிற்றுண்டியை வீட்டில் முடித்துவிட்டு தலைமைச் செயலகம் செல்லும் வழியில் (மேசையைத் தட்டும் ஒலி) திடீரென்று "போர் நிறுத்தம் ஏற்படும் வரை உண்ணாவிரதம்" என்று அறிவித்து, கடற்கரையில் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ள ஆரம்பித்தார் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி. மதிய உணவு வேளை வந்தவுடன், நண்பகல் 12-00 மணியளவில் "விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை இலங்கை அரசு முடித்துக்கொண்டுவிட்டது" என்ற செய்தியை ஊடகங்களுக்கு அறிவித்துவிட்டு, தன்னுடைய உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டுவிட்டார். இதன்மூலம் "உண்ணாவிரதம்" என்னும் அறப்போராட்டத்தைக் கேலிக்கூத்தாக்கிவிட்டார் முன்னாள் முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி)

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஜுன் 8

"போர் நிறுத்தம் ஏற்பட்டுவிட்டது" என்ற முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதியின் பேச்சைக் கேட்டு, பாதுகாப்பாகப் பதுங்குக் குழிகளில் பதுங்கியிருந்த இலட்சக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் வெளிவந்தனர். இவ்வாறு வெளிவந்த அப்பாவி இலங்கைத் தமிழர்கள்மீது இலங்கை இராணுவத்தினர் கொத்துக்கொத்தாக இடைவிடாது குண்டுகளை வீசி அவர்களை ஈவு இரக்கமின்றி படுகொலை செய்தனர். இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் இலங்கை இராணுவ முகாம்களில் கம்பிகளாலான வேலிகளுக்குப் பின்னால் அடைத்து வைக்கப்பட்டதாகவும், முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள தமிழ்ப் பெண்கள் இலங்கை இராணுவப் படையினரின் கண் முன்னேயே பொது இடங்களில் இயற்கை உபாதைகளைக் கழிக்கக்கூடிய நிலைமைக்கும், குளிக்கக்கூடிய நிலைமைக்கும் ஆளாக்கப்பட்டதாகவும், தமிழர்கள் குடியிருந்த பகுதிகளிலெல்லாம் சிங்களர்கள் குடியேறியிருப்பதாகவும் செய்திகள் வந்தன. ஆனால், கனிமொழி உட்பட ஐக்கிய முற்போக்குக் கூட்டணி சார்பில் இலங்கை சென்று, இலங்கை அதிபர் ராஜபக்சேவுடன் சிரித்துப் பேசி, விருந்துண்டு, பரிசுப் பொருட்களைப் பெற்று சென்னை திரும்பிய நாடாளுமன்றக் குழுவோ, (மேசையைத் தட்டும் ஒலி) "இலங்கைத் தமிழர்கள் எல்லோரும் நலமாக இருக்கிறார்கள்" என்று ஒரு உண்மைக்கு மாறான தகவலை வெளியிட்டது. உண்மை நிலை என்னவென்றால், போரினால் இடம் பெயர்ந்த தமிழர்கள் மறுவாழ்வு பெறாமல், இன்னமும் அவதிப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

முற்பகல் 11-20

"போர் நிறுத்தம் ஏற்பட்டுவிட்டது" என்ற உண்மைக்கு மாறான தகவலைக் கூறி, இலங்கைத் தமிழர்களை இலங்கை இராணுவத்திடம் காட்டிக் கொடுத்துவிட்டார் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி. (மேசையைத் தட்டும் ஒலி) "தமிழினப் பாதுகாவலர்" என்று தன்னைத்தானே சொல்லிக்கொண்டு, தமிழினப் படுகொலைக்குத் துணை போயிருப்பதைப் பார்க்கும்போது, "உறவு போல் இருந்து, குளவி போல் கொட்டுவது" என்னும் பழமொழிதான் நினைவிற்கு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

2011 ஜூன் 8] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இவற்றையெல்லாம் நான் இங்கே சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், முன்னாள் முதலமைச்சரைக் குற்றம்சாட்ட வேண்டும்; முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசை குறை சொல்ல வேண்டுமென்பதற்காக அல்ல. "அப்பாவி இலங்கைத் தமிழர்கள் உயிரிழப்பதற்கு முந்தைய அரசு காரணமாக அமைந்துவிட்டதே" என்ற ஆற்றாமையால்தான், இவற்றை நான் இங்கே குறிப்பிடுகிறேன். முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசின் சுயநலப் போக்கு மற்றும் கையாலாகாத்தனம் காரணமாக, பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் இலங்கை இராணுவத்தின் குண்டு மழைக்குப் பலியாகியிருக்கிறார்கள்; குண்டு மழைக்கு விலக்களிக்கப்பட்ட பகுதி மற்றும் மருத்துவமனைகள் மீதெல்லாம், இலங்கை இராணுவம் குண்டு மழை பொழிந்திருக்கிறது; மனிதாபிமான அடிப்படையில் நிவாரணப் பொருட்கள் மக்களைச் சென்றடைவதை இலங்கை அரசு தடுத்து நிறுத்தியிருக்கிறது; உணவு மற்றும் குடிநீர்ப் பற்றாக்குறை காரணமாக, ஏராளமான தமிழர்கள் மரணமடைந்துள்ளனர்; மனித உரிமை மீறல்கள் நிகழ்ந்துள்ளன.

இந்தக் காரணங்களுக்காகத்தான் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இங்கே பேசிய மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டு கட்சி உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள், "பொருளாதாரத் தடையைக் கொண்டு வர வேண்டும்" என்ற வரிகளை விலக்கிக் கொண்டால் என்ன என்ற ஒரு கருத்தை இங்கே தெரிவித்தார். இதனால் அப்பாவித் தமிழ் மக்களும் பாதிக்கப்படுவார்களே என்ற ஒரு கருத்தைச் சொன்னார். இப்போதே இலங்கை அரசு யாருக்கும் பணியவில்லை. அங்கே வாழ்கின்ற இலங்கைத் தமிழர்களுக்கு, சிங்களர்களோடு அனைத்து உரிமைகளையும், குடியுரிமைகளையும் வழங்க வேண்டுமென்று இந்தியா சொன்னாலும், யார் சொன்னாலும், அவர்கள் அதை மதிக்கவில்லை. அதனால், அவர்களை எப்படி வழிக்குக் கொண்டு வருவது? அவர்களை வழிக்குக் கொண்டு வருவதற்கு ஒரே வழி பொருளாதாரத் தடைகள்தான். இதுவொரு தற்காலிகமான முறைதான். இந்திய அரசும், இன்னும் சில நாடுகளும் இணைந்து, இலங்கை அரசின்மீது ஒரு பொருளாதாரத் தடையைக் கொண்டு வந்தால், குறுகிய காலத்திற்குள்ளேயே நாம் சொல்வதை இலங்கை அரசு கேட்டுத்தான் ஆக வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி) வேறு வழியில்லை என்பதற்காகத்தான் இதைச் சேர்த்திருக்கிறோம்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2011 ஜூன் 8

இந்தத் தீர்மானத்தின்மீது இங்கே கருத்துத் தெரிவித்துப் பேசிய இன்னும் சில மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது, ஐ.நா. சபை ராஜபக்சேவை போர்க் குற்றவாளி என்று அறிவித்துவிட்டதாக இங்கே தெரிவித்தார்கள்; அப்படியில்லை. ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் திரு. பான் கீ மூன் அவர்கள் ஒரு குழுவை அமைத்து, அவர்கள் அங்கே நிகழ்த்தப்பட்ட போர்க் குற்றங்களைப் பற்றி ஓர் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிட்டார். அந்தக் குழு சமர்ப்பித்த அறிக்கையில், இப்படிப்பட்ட போர்க் குற்றங்களெல்லாம் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படுகிறது; அங்கே வாழ்கின்ற தமிழ் மக்கள்மீது இத்தகைய குற்றங்களெல்லாம், கொடுமைகளெல்லாம் நிகழ்த்தப்பட்டுள்ளன என்பதையெல்லாம் தெரிவித்துவிட்டு, இதனை இலங்கை அரசே விசாரிக்க வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறார்களே தவிர, இதை உறுதியும் செய்யவில்லை; ராஜபக்சேவோ, மற்றவர்களோ போர்க் குற்றவாளிகள் என்று ஐ.நா. சபை அறிவிக்கவுமில்லை. அதனால்தான் இந்தத் தீர்மானத்தில் “இந்திய அரசு போர்க் குற்றம் புரிந்தவர்களை, போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த வேண்டும்; இதற்கு ஐ.நா. சபையை வலியுறுத்த வேண்டும்” என்று தீர்மானம் கொண்டு வந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

எனவே, மனிதாபிமானமற்ற முறையில், ஈவு இரக்கமின்றி பல்லாயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் சுட்டுக் கொல்லப்படுவதற்குக் காரணமானவர்களைப் போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வற்புறுத்த வேண்டுமென்றும்; இலங்கையில் உள்ள அகதிகள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு முழு மறுவாழ்வு அளித்து, அவர்கள் வசித்த இடங்களிலேயே அவர்களை மீண்டும் குடியமர்த்தி; சிங்களர்களுக்கு உரிய அனைத்து குடியுரிமைகளையும் தமிழர்களுக்கு இலங்கை அரசு வழங்கும் வரையில் மற்ற நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசுமீது பொருளாதாரத் தடையை விதிக்க வேண்டும் என்றும் மத்திய அரசை வலியுறுத்தி, அரசு சார்பில் என்னால் முன்மொழியப்பட்ட தீர்மானத்தினை இந்த மாமன்றம் ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

2011 ஜுன் 8]

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க.* *(ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க.*

*மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.*

*மறுப்போரே இல்லை.*

*தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.*

*மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள வரலாற்றுச் சிறப்பும், முக்கியத்துவமும் வாய்ந்த இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும்போது தி.மு.க. வெளிநடப்புச் செய்துள்ளது துரதிருஷ்டவசமானது.*

## 7. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம். முதலில் திரு. பழ. கருப்பையா அவர்கள் உரையினைத் தொடரலாம். உங்களுக்கு உரையாற்ற ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள்.*

****திரு. பழ. கருப்பையா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போற்றுதலுக்குரிய எங்களின் தாய், தமிழ்நாட்டு முதலமைச்சர் வரலாற்றுப் புகழ்மிக்க தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கின்ற இன்றைக்கு இந்த அவையில் ஆளுநரின் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தது குறித்து நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.*

*ராஜபக்சே ஒரு போர்க் குற்றவாளி என்றும், அந்தப் போர்க் குற்றவாளியின் நாட்டிற்குப் பொருளாதாரத் தடை விதிக்கப்பட வேண்டுமென்றும், உலக அரங்கின் கவனத்தை ஈர்க்கின்ற வகையிலும், இதற்கு முன்னர் இருந்த அரசு மத்திய அரசோடு இணைந்து செய்த கேடுகளுக்கும், வஞ்சகச் செயல்களுக்கும்*